Registered at the G. P. O. as a Newspaper

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

போன்: 389 National TAMIL DAILY தேசிய தினசரி தபாற் பெட்டி எண்: 49

மலர் 3 யாழ்ப்பாணம், சார்வரி பங்குனி 9ஆம் நாள் ஷவ்வால் 4 (22-3-61) புதன்கிழமை இதழ் 34




# சத்தியாக்கிரகத்துக்கு என்ன பதில்?

## "முக்கிய கூட்டம்" கூட்டுகிறார் மெத்தானந்தா

கொழும்பு, செவ்வாய்

தமிழ் பேசும் மக்கள் நடத்தும் சத்தியாக்கிரக இயக்கம் சம்பந்தமாக என்ன பதில் நடவடிக்கை எடுக்கலாம்?

இதுபற்றி ஆலோசனை செய்ய, சிங்களவரிடையேயுள்ள அரசியல், கலாச்சார முதலிய ஸ்தாபனங்களை எல்லாம் கொழும்பில் ஒரு முக்கியமான கூட்டத்துக்கு வருமாறு பத்தேகம விமலவம்ச தேரோவும் திரு. எல். எச். மெத்தானந்தாவும் அழைத்திருக்கின்றார்கள்.

இதுபற்றி அவ்விருவரும் அனுப்பியுள்ள சுற்றறிக்கையில் இக்கூட்டம் "மிக முக்கியமானது" என்று குறிப்பிட்டுள்ளனர்.

"வடக்கிலும், கிழக்கிலும் மீண்டும் அரசாங்க நிர்வாகத்தை ஏற்படுத்த வேண்டும்" என்று திரு. மெத்தானந்தா அரசாங்க மெம்பர்களில் சிலரைக் கண்டு வற்புறுத்தினர்.

இக்கோஷ்டியினர் சத்தியாக்கிரகத்தைப் பற்றிய தங்கள் கருத்துக்கள் அடங்கிய ஒரு விஞ்ஞாபனத்தை அரசாங்கத்துக்குச் சமர்ப்பிப்பரென்று தெரிகிறது.

## நோயாளிகள் உணவு நிலை

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணம் அரசினர் ஆஸ்பத்திரியில் நோயாளிகளுக்கு உணவு வழங்குவதற்கான அரிசி பெற்றுக்கொள்வதற்குரிய உத்தரவுச்சீட்டுக்களைக் கச்சேரிக்கு வந்து பெற்றுக்கொள்ளும்படி உத்தரவிடப்பட்டிருக்கிறதாம். வழக்கம்போல் தபாலிலேயே உத்தரவுச்சீட்டுக்களை அனுப்பும்படி ஆஸ்பத்திரி அதிகாரிகள் பதிலளித்துள்ளனராம்.

## மருந்துத் தட்டுப்பாடு

உடுவில், செவ்வாய்

வடமாகாணத்திலுள்ள அரசாங்க ஆஸ்பத்திரிகளில் முக்கிய தேவைக்குரிய மருந்து வகைகளுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாம்.

தந்திக்கு மேல் தந்தியனுப்பியும் சென்ற ஜனவரி மாதம் அனுப்பவேண்டிய மருந்துகளே கொழும்பிலிருந்து அனுப்பப்படவில்லையென்று வைத்திய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## கூப்பன் அரிசி மறுப்பா?

### அரசாங்கத்துக்கு கூட்டுறவு சமாஜம் பதில்

யாழ்ப்பாணம், புதன்

"பங்கீட்டரிசிக்கான அனுமதிச் சீட்டுக்களை கச்சேரியிலுள்ள அரசாங்க அதிபரின் காரியாலயத்துக்கு வந்து பெற்றுக்கொள்ளவேண்டுமென சமாஜங்களை மீண்டும் மீண்டும் வற்புறுத்துவது, மக்களுக்குப் பங்கீட்டரிசி கிடைக்காமல் செய்வதற்கு அரசாங்கம் முழு முயற்சி செய்வதாகவே தோன்றுகிறது."

இவ்வாறு யாழ்ப்பாண மாவட்டக் கூட்டுறவுச்சங்க சமாஜங்களின் மகாநாட்டுக் காரியதரிசி, திரு. டி. கே. இராஜசேகரம் நேற்று மாலை விடுத்த ஒரு அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

திரு. இராஜசேகரம் பத்திரிகைக்கு விடுத்த அறிக்கையில் மேலும் கூறுவதாவது:-

இம்மாதம் 20ந் திகதி பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சும் உள்நாட்டு அமைச்சும் கூட்டாக வெளியிட்ட அறிக்கை தவறான விளக்கம் தருவதாக உள்ளது. உதவி உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரியின் அதிகாரத்தையோ கடமையையோ பாதிக்காதவகையில், பங்கீட்டரிசி விநியோகத்துக்கான நடைமுறைக்குரிய மாற்று ஒழுங்கு ஒன்றை யாழ்ப்பாண அரசாங்க அதிபரிடம் சமாஜங்கள் சமர்ப்பித்த மிக

(6-ம் பக்கம் பார்க்க)

## அரசாங்க ஊழியர் திடீர் மாற்றப் பிரச்சினை

### கவனம் செலுத்துவதாக உணவு மந்திரி வாக்குறுதி

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணத்தில் கடமையாற்றிய அரசாங்க ஊழியர் சிலருக்கு திடீரென்று இடமாற்ற உத்தரவு கிடைத்தது பற்றி தாம் சம்பந்தப்பட்ட அமைச்சர்களுடன் கலந்தாலோசித்து ஆவன செய்வதாக உணவு, வர்த்தக அமைச்சர் திரு. ரி. பி இலங்கரத்தின தம்மைப் பேட்டிகண்ட அரசாங்க சேவைக் குமாஸ்தாக்கள் சங்கத் தூதுகோஷ்டியிடம் கூறினர்.

யாழ்ப்பாணத்தில் நடைபெற்றுவரும் சத்தியாக்கிரக இயக்கம் சம்பந்தமாக சுமார் பதினைந்து அரசாங்க ஊழியர்களுக்கு இடமாற்ற உத்தரவு கிடைத்தது பற்றியும் அரசாங்க ஊழியருக்குச் சம்பளம் கிடைக்காதது பற்றியும் அரசாங்க சேவைக் குமாஸ்தாக்கள் சங்கம் மந்திரிகளுக்கும் அரசாங்க அதிகாரிகளுக்கும் தந்திமூலம் வேண்டுகோள் விடுத்திருந்தது. இதற்கு எவ்வித பதிலும் கிடைக்காததால் சங்கத்தின் தூதுகோஷ்டியொன்று மந்திரிமார்களைப் பேட்டிகண்டு நிலைமையை விளக்கிக் கூறவேண்டுமென்று சங்கம் முடிவுசெய்தது.

தூதுகோஷ்டியினர் மந்திரிமாரைச் சந்திக்க முயன்றும் சிலரைச் சந்திக்க முடியாது போய்விட்டதாம். உணவு அமைச்சர் திரு. இலங்கரத்தினவைமட்டும்தான் சந்திக்க முடிந்தது.

திடீரென்று அரசாங்க ஊழியர்கள் காலி, கண்டி, அம்பாந்தோட்டை போன்ற இடங்களுக்கு மாற்றம் செய்யப்பட்ட

(6ம் பக்கம் பார்க்க)

## இடமாற்றம் இப்போது இல்லை!

கொழும்பு, செவ்.

ஆசிரியர்கள் இடமாற்றத்தை மே மாதம் முதலாந் திகதி வரை நிறுத்தி வைக்கும்படி கல்வி மந்திரி பதியுதீன் மாமூத் உத்தரவிட்டுள்ளார்.

# சத்தியாக்கிரகம்பற்றி மந்திரிசபைஆலோசனை

## நாளைக்கு விசேஷ கூட்டம்

கொழும்பு, செவ்வாய்

இன்று நடைபெற்ற மந்திரி சபைக் கூட்டத்தில் மன்னார் உள்ளிட்டு வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள நிலைமையைப் பற்றி விவாதித்தனர். மன்னார், திருக்கோணமலை, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் முதலிய இடங்களிலுள்ள அரசாங்க அதிபர்கள் அனுப்பிய பல்வேறு அறிக்கைகளையும் மந்திரிகள் பரிசீலனை செய்தனர்.

வியாழனன்று பிரதம மந்திரி வந்ததும், மந்திரி சபையின் விசேஷ கூட்டம் நடத்துவதென்று தீர்மானித்தனர். சத்தியாக்கிரகத்தைப்பற்றி ஒரு உறுதியான அறிக்கை அக்கூட்டத்தில் சமர்ப்பிக்கப்படும்.

இன்றைய கூட்டத்தில் எவ்வித முக்கிய தீர்மானமும் செய்யப்படவில்லை.

## மன்னாரில் திருமதி அழகக்கோன் தலைமையில் பெண்கள் மறியல்

மன்னார், செவ்வாய்

மன்னாரில் மறியல் இயக்கம் ஆரம்பமான இரண்டாவது தினமான இன்றும் ஆயிரத்துக்குமேற்பட்ட தொண்டர்கள் சத்தியாக்கிரகத்தில் கலந்து கொண்டனர்.

இன்றைய மறியல் இயக்கத்துக்கு உயிலங்குளம் கிராமச் சங்கத் தலைவரும் நானாட்டான் கிராமச் சங்கத் தலைவரும் தலைமை தாங்கினார்கள்.

மன்னார்த் தொகுதி எம். பி. திரு. வி. ஏ. அழகக்கோனின் பாரியாரான திருமதி அழகக்கோனின் தலைமையில் சுமார் 200 பெண் தொண்டர்கள் மறியலில் கலந்துகொண்டனர்.

நானாட்டான், உயிலங்குளம், பேசாலை, விடத்தல்தீவு, செட்டிகுளம் முதலிய இடங்களிலிருந்து வந்த தொண்டர்கள் இன்றைய மறியலில் கலந்துகொண்டனர். சிங்களப் பெண்கள் சிலரும் சத்தியாக்கிரகம் செய்தனர். மறியல் இயக்கம் காரணமாகக் கச்சேரி வாசல்கள் யாவும் முற்றுகையிடப்பட்டு, கச்சேரி வேலைகள் ஸ்தம்பித்துள்ளன. பல்வேறு இடங்களிலிருந்து மாணவர்கள்

(6-ம் பக்கம் பார்க்க)

## தமிழ்நாட்டில் எஃகு ஆலை

சென்னை, மார்ச் 21

தமிழ் நாட்டில் எஃகு ஆலையொன்றை அரசாங்கம் நிறுவ இருக்கிறது. இந்த ஆலை வருடம் 20 ஆயிரம் தொன் எஃகு உற்பத்தி செய்யுமாம்.

# யாழ்ப்பாணத்தில் அமைதியான மறியல்

## பெண் தொண்டர்கள் உற்சாகம்

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணத்தில் சத்தியாக்கிரக இயக்கம் ஆரம்பமாகி ஒரு மாதமும் ஒரு நாளும் கடந்துவிட்டது. ஊர்வலங்களும் கோஷங்களும் சுலோக அட்டைகளுமாகக் காணப்பட்ட யாழ்ப்பாண நகரம் சென்ற இரண்டு தினங்களாக அமைதியாகக் காட்சியளித்துக்கொண்டிருக்கிறது.

(6-ம் பக்கம் பார்க்க)

## கடல்நீரை நன்னீராக்குதல் இஸ்ரேலின் முயற்சி

கடல் நீரை நிரந்தரமாக நன்னீராக்கும் முயற்சியில் இஸ்ரேல் நாட்டுப் பொருளாதார அமைச்சு ஈடுபட்டுள்ளது. இத் திட்டம் கைகூடுமாயின் உலகில் இஸ்ரேல் நாடே கடல் நீரை நன்னீராக்கும் முயற்சியில் வெற்றி கண்ட முதலாவது நாடாகக் கருதப்படும்.

### மணிவாக்கு

அன்புக்கு எப்போதும் தோல்வி கிடையாது. இன்றோ நாளையோ பலயுகங்களுக்குப் பிறகோ சத்தியம் வெற்றியடைதல் நிச்சயம். அன்பே வெற்றி கொள்ளும்.

—விவேகாநந்தர்


# ஈழநாடு

EELA NADU

யாழ்ப்பாணம் சார்வரி ஆண்டு பங்குனி மீ 9 உ (22-3-61)

EELA NADU: National Tamil Daily Post Box 49, Jaffna Telegrams EELA NADU Jaffna Phone: 389.


## பிரதமரின் முதல் வேலை

லண்டனிலிருந்து பிரதமர் சிறிமாபண்டாரநாயக்கா நாளை இலங்கை திரும்புகின்றார். திரும்பியதும் அவருக்கு முதல் வேலையாகக் காத்திருப்பது வடமாகாணத்தில் கூப்பன் அரிசி விநியோகப்பிரச்சினையே. அவர் இல்லாத சமயத்தில் விரிந்த நோக்கமற்ற சில அதிகாரிகளின் நடவடிக்கையால் இங்கு இரண்டு வாரங்களாகப் பொதுமக்களுக்கு கூப்பன் அரிசி கொடுக்கப்படாமல் இருக்கின்றது. இதனால் பொதுமக்களிடை மனக்கசப்பு அதிகரித்து அரசாங்கத்தின் மீது பல தப்பெண்ணங்கள் ஏற்படுவதாகவுள்ளன.

திருக்கோணமலை, மட்டக்களப்பு இவ்விடங்களில் கச்சேரிகளுக்கு முன் மறியல் நடந்தாலும், கூப்பன் அரிசி வழங்க வேறு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. கச்சேரிக்குப் புறம்பாகவே அரிசி வழங்கப்படுகின்றது. யாழ்ப்பாணத்திலே கச்சேரியும், அதிபரின் வாசஸ்தலமும் ஒரே எல்லைக்குள் இருக்கின்றன. இதை முன்னிட்டே முன்னர் அதிபராக இருந்த திரு. ஸ்ரீகாந்தா தமது அதிகாரிகளை கூட்டுறவு ஸ்தாபனங்களுக்கு அனுப்பி பொதுமக்களுக்கு அரிசி தட்டின்றிக்கிடைக்கும்படி செய்தார். அந்த ஏற்பாட்டை மாற்றியது பெரிய தவறென்று "லங்காதீப" பத்திரிகையும் இடித்துக் கூறுவது குறிப்பிடத்தக்கது.

கூட்டுறவுச்சங்கங்கள் வாசஸ்தலத்துக்கு வர மறுப்பதாக அரசாங்க அறிக்கை தெரிவிக்கிறது. தங்களை தமது "காரியாலயத்துக்கு" வரும்படியே அதிபர் தந்தி அடித்ததாயும், அங்கு மறியல் காரணமாகச் செல்ல முடியவில்லை என்றும், முதல் இரண்டு வாரங்களில் செய்ததது போலவே அரிசி உத்தரவுச்சீட்டு அளிக்கவேண்டுமென்றும் கூட்டுறவு ஸ்தாபனங்கள் கூறுகின்றன. இது சரியா, தவறா என்பது விஷயமல்ல. உணவு விநியோகம் செய்ய வேண்டிய முதல் பொறுப்பும் கடமையும் அரசாங்கத்தைச்சேர்ந்தது. சென்ற இரண்டு வாரங்களாக அது அப்பொறுப்பை நிறைவேற்றவில்லை.

கச்சேரிக்கு வெளியிலும் உணவை எப்படியும் விநியோகிக்க ஒழுங்கு செய்வதாகவும், அவசியமாயின் வடமாகாணத்துக்குத் தாமே நேரில் வருவதாகவும் உணவு மந்திரி திரு. இலங்கரத்ன பார்லிமெண்டில் அறிவித்தார். சென்ற இரண்டு வாரங்களாக இங்கு உணவு விநியோகமில்லாதது மந்திரிக்குத் தெரிந்தே இருக்கவேண்டும். வீண் கௌரவங்களைப் பார்த்துக்கொண்டிருக்கக் கூடிய சமயமல்ல இது. சத்தியாக்கிரக விஷயம் வேறு. உணவு விநியோகம் வேறு. இரண்டையும் குழப்பிக்கொள்ளக்கூடாது.

நிலைமை இவ்விதமே நீடிக்குமாயின், பல பல சிக்கல்கள் ஏற்படும். இதற்கு இடம் கொடுக்காமல் பிரதம மந்திரி சிறிமா, கொழும்பு திரும்பியதும் முதலில் இவ்விஷயத்தைக் கவனித்து, இங்கு பொது மக்களுக்கு உடன் கூப்பன் அரிசி கிடைப்பதற்கான ஒழுங்கை விரிந்த மனப்பான்மையுடன் செய்யவேண்டும். இதைச் செய்தால் பின்னர் அரசியல் சிக்கலும் தீருவதற்கான சூழ்நிலை உருவாகலாம்.

# 'சுயராஜ்யம் எனது பிறப்புரிமை; அதை அடைந்தேதீருவேன்'

—லோகமான்ய திலகர்

"சுயராஜ்யம் எனது பிறப்புரிமை அதை அடைந்தே தீருவேன்" என்று வீர கர்ஜனை செய்த, லோகமான்யபால கங்காதர திலகர், இந்திய சுதந்திரத்தின் தந்தை என்று போற்றப்படுவர். அவர் 1919-ம் வருடம் இலங்கை மார்க்கமாக லண்டன் சென்று பாடிங்டன் எனுமிடத்தில் ஒரு விடுதியில் தங்கி இருந்தார். அந்த இடத்தை லோகமன்ய ஞாபக சபையினர் விலைக்கு வாங்கி, அங்கு ஒரு ஞாபகச் சின்னத்தைச் சென்ற திங்கட்கிழமை திறந்து வைத்தனர். அவ்விழாவில் இலங்கைப் பிரதமரும், கானாப் பிரதமரும் கலந்து கொள்வதாக இருந்தது. பிரதமர் சிறிமாவுக்கு உடல் நலம் சரியில்லாத காரணத்தால், அவருக்குப் பதில் ஸ்ரீமதி விஜயலட்சுமி பண்டிட் இவ்விழாவில் கலந்து கொண்டார். சுதந்திர வீரரான லோகமான்யரின் வாழ்க்கையை இச்சமயம் சிறிது நினைவு கூருவோம். இலங்கையில் அவர் கொச்சிக்கடைத் தம்பையா சத்திரத்தில் இருந்ததாகத் தெரிகிறது.

"லோகமான்யர்" என்று பாரத மக்களால் அன்போடு அழைக்கப்பட்ட பாலகங்காதர திலகர், பம்பாய் மாகாணத்தில் ரத்னகிரி என்ற இடத்தில் 1856-ம் வருடம் ஜூலை மாதம் பிறந்தார். ஓர் ஏழைப் பள்ளி ஆசிரியரின் மகன் அவர். சிறு வயதிலே சம்ஸ்கிருதத்தில் அவருக்கு நல்ல தேர்ச்சி உண்டு. பூனாவில் பி. ஏ. படித்துப் பின்னர் சட்டமும் கற்றார்.

சிறு வயதிலேயே சமூக சேவைகளில் நாட்டமுள்ள திலகர் "கேசரி" என்ற மராட்டிய வாரப் பத்திரிகையை ஆரம்பித்தார். அதற்கு மிகுந்த செல்வாக்கு இருந்தது. கோலாப்பூர் அரசாங்கத்தின் அட்டூழியங்களை அம்பலப்படுத்தியதற்காகச் சிறைப்பட்டார். அவர் மீது மக்களுக்கு மதிப்பு அதிகரித்தது.

இந்திய தேசிய காங்கிரஸ் மகாசபையின் ஆரம்பக் கூட்டத்திலும் (1885) பிந்திய கூட்டங்களிலும் தீவிர பங்கெடுத்தார். பிரிட்டிஷ் அரசாங்கத்தின் தயவுக்குக் கெஞ்சி மனுச் செய்து கொள்ளும் போக்கை பலமாகக் கண்டித்தார்.

1896 - 97 ஆண்டுகளில் இந்தியாவில் பஞ்சமும் நோயும் தாண்டவமாடியது. அச்சமயம் அரசாங்கத்தின் போக்கைத் திலகர் பலமாகக் கண்டித்ததோடு, மக்களின் துயரைப் போக்க அரிய சேவையும் செய்தார்.

1897 ஜூனில் ஒரு வாலிபர் சித்பவான் என்ற இடத்தில் இரு பிரிட்டிஷ் அதிகாரிகளைக் கொன்றுவிட்டார். இக்கொலைகளுக்கும் திலகருக்கும் எவ்வித பந்தமுமில்லை என்று நிரூபிக்கப்பட்டும் அவருக்கு 18 மாதச் சிறைத் தண்டனை விதித்தனர்.

மிதவாதிகள் கையிலிருந்த காங்கிரஸைத் தீவிர போராட்ட காங்கிரஸாக 1906-ம் வருடம் சூரத் மகாநாட்டில் மாற்றிய பெருமை திலகருக்கே உண்டு. அக்கூட்டத்தில் அவர் தலை மீது செருப்புக்கள் விழுந்தும், அவர் அசையாமல் பொறுமையுடன் இருந்தார்.

1908-ம் வருடம் வங்காளத்தில் இரு பிரிட்டிஷ் பெண்கள்மீது ஒரு வாலிபன் குண்டு வீசிக் கொன்றதை 'கேசரி' பத்திரிகையில் திலகர் பாராட்டி எழுதினார். இதற்காக 6 வருட தண்டனை அடைந்து பர்மாவில் மாந்தலே சிறையில் அடைபட்டார். சிறைவாசம் செய்கையில் அவர் 'பகவத்கீதை'க்கு ஆங்கிலத்தில் புகழ் பெற்ற விரிவுரை எழுதிப் பல நூல்களாக வெளியிட்டார்.

1919-ல் அமிர்தசரஸ் காங்கிரஸில் மகாத்மாகாந்தி பிரவேசித்தகாலம் வரையில் திலகர் முதன்மை வகித்து வந்து, அடுத்த ஆண்டு ஆகஸ்டில் காலமானார்.

கொள்கையில் வேற்றுமை இருப்பினும், லோகமான்யரின் தேசாபிமானம், தியாகபுத்தி, இவற்றில் மகாத்மாவுக்கு அதிக மதிப்புண்டு.

"வாழ்க திலகன் நாமம்
வாழ்க வாழ்கவே,
வீழ்க கொடுங்கோன்மை
வீழ்க வீழ்கவே!
நாலு திசையும் ஸ்வாதந்
தர்ய
நாதம் எழுகவே!
நரகமொத்த அடிமை வாழ்வு
நைந்து கழிகவே!
ஏழுமனிதர் அறவை
யடர்க்கும்
இருள் அழிகவே!
எந்த நாளும் உலகமீதில்
அச்சம் ஒழிகவே!

—அமரகவி பாரதியார்.

## ஐயாறன் எழுதுவது

"திருமுருக கிருபானந்தவாரியார் போலவே ஒருவர் வண்ணை சிவன் கோவிலில் கதை செய்கின்றார். அவசியம் அதை வந்து கேட்க வேண்டும்" என்று ஓர் அன்பர் அழைத்தார். நானும் சென்றேன்.

அப்பர் சுவாமிகளின் கதை பாதி நடந்து கொண்டிருந்தது. "கூற்றாயினவாறு விலக்ககிலீர்—கொடுமை பல செய்தன யானறியேன்" என்ற தேவாரத்தைப் பலரிடம் கேட்டிருக்கிறேன். ஆனால் திரு. சிவ அன்பு, மிக உருக்கமாக இனிமையாக இதை இசையுடன் பாடிய போது, அவருக்கு மட்டுமன்றி கேட்ட பலருக்கும் கண்ணீர் வந்து விட்டது.

இடது கையை ஆட்டுவது, தலைமைக்கு மேல் கையைத் தூக்குவது உட்பட, எல்லாம் அசல் வாரியார்தான்.

* * *

"கடவுளை மறந்ததால்தான் கண்டமெல்லாம் அப்பருக்கு சூலை நோய் கொடுத்து, இறைவன் அவரைத் திருப்பினார். அதுபோல நமக்கு இன்று வந்துள்ள கண்டமும் கடவுளை மறந்ததால்தான்" என்று கூறி, "மொழிக்குத் துணை முருகா எனும் நாமம்" என்று கதையை ருசியாகச் சொல்லிக்கொண்டு போனார், இன்றைய சூழ்நிலையுடன் ஒப்பிட்டு.

"நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்..." என்று இடிமுழக்கம் போல் அவர் இடித்துக்கூறிய போது, மரக்கட்டைக்கும் உணர்ச்சிவரும் போலிருந்தது.

குறைந்தது மூன்று மணி நேரமாவது அவருக்குக் கொடுக்க வேண்டும். நவரசங்களும் ததும்ப கதையை வெகு ருசிகரமாகச் செய்கின்றார். பெரியார் அவர்களே இவர் கதையைக் கேட்டுப் பாராட்டி, "சிவ அன்பு" என்று பெயரிட்டாராம்.

இளம் வயது. வல்வெட்டித்துறையைச் சேர்ந்தவரென்றும், மானிப்பாய் ஆஸ்பத்திரியில் அப்பாதிகாரியாக இருப்பதாயும் அறிந்தேன். இனிய சாரீரமும் கலைச் செல்வமும் நிறைந்த "சிவ அன்பு" பற்றி ஈழநாடு பெருமை கொள்ளலாம். மேலான எதிர்காலம் அவருக்குக் காத்திருக்கிறது.

* * *

பங்குனி மாதம் வெயில். யாழ்ப்பாணத்தில் கொளுத்து கொளுத்தென்று கொளுத்துகிறது. காரியாலயத்துக்குள் இருந்தே வேலை செய்ய முடியவில்லை.

தெருவில் தார் ரோட்டில் பெண் சத்தியாக்கிரகிகள் எப்படித்தான் இருந்து வெயிலை சகித்துவருகிறார்களோ என்று தோன்றியது.

திருநாவுக்கரசரை சுண்ணாம்புக் காளவாய் எனும் நீற்றறையில் போட்டனராம். அவருக்கு அது எப்படியிருந்ததாம் தெரியுமா? "மாசில்வீணையும், மாலை மதியமும், வீசு தென்றலும், வீங்கிள வேனிலும், மூசு வண்டறை பொய்கையும் போன்றதே ஈசன் எந்தை இணையடி நீழலே" என்று அச்சமயம்தான் பாடினாராம் அவர். கற்றூணைப்பூட்டி கடலில் பாய்ச்சியபோது, "நற்றுணையாவது நமச்சிவாயவே" என்று அவர் பாடிவைத்தது இன்று நம்மில் பலருக்கும் பயன்படவேண்டும்.

* * *

கோயிலில், ஞானசம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர் இந்நான்கு சமய குரவர்களின் திருவுருவங்களையும் இரு ரிஷப வாகனங்களில் எழுந்தருளச்செய்து, சிவபெருமானுக்கு நடக்கும் சோடசோபசார பூசை போலவே ஏககாலத்தில் அவர்களுக்கும் செய்த காட்சி, அடியார்களின் பெருமையை நன்கு அறிவுறுத்தியது.

சமய குரவர்கள் பாடிவைத்துள்ள திருமுறைச் செல்வங்கள், தமிழுக்கும் தமிழருக்கும் என்றென்றும் ஆக்கமளிப்பவை. தெருவிலே நான்கு மூர்த்திகளும் பவனிவந்த போது, தேவார திருவாசகங்களை முழங்கியிருந்தால் மிகவும் பொருத்தமாக இருந்திருக்கும்.

ஒவ்வொரு கோவிலுக்கும் ஒரு ஓதுவா மூர்த்தி இருக்க வேண்டும். பஜனைக் கோஷ்டிகள் பல உற்சவ காலத்தில் முழங்கவேண்டும். அப்படி முழங்கினால், திருமுறைகள் பாடிய சமய குரவர்களின் நோக்கம் நிறைவேறுவதுடன், உற்சவத்தால் பக்தி பெருகி, மக்களுக்கு நல்லபயன் அளிக்குமல்லவா!

---

## பணமுடிப்பு

காரைநகர், திங்கள்

காரைநகர். மக்கள் ரூபா 1,100 கொண்ட பணமுடிப்பொன்றை திரு. அ. அமிர்தலிங்கம் எம். பி. மூலம் தமிழரசுக் கட்சித் தலைவர் திரு எஸ். ஜே. வி. செல்வநாயகத்திடம் ஒப்படைத்துள்ளனர்.

### ஆசிரியருக்குகடிதங்கள்

## தமிழருக்கு நியாயம் வழங்குவோம்!

திரு. எல். எச் மெத்தானந்தாவும் அவரது சகாவும் வெளியிட்டிருந்த ஒரு கடிதம், இந்நாட்டில் சீக்கிரத்தில் மற்றோர் இரத்தவெள்ளம் திட்டமாக ஏற்படச்செய்வதற்கே ஆகும். சென்ற வகுப்புக் கலவரத்தின் போது நடந்த பயங்கர சம்பவங்களை நேரில் பார்த்தவர்கள், அதைநினைத்து வெட்கமும் பீதியும் அடைகிறார்கள்.

ஒரு பக்கம் பிரசாரக் கூட்டங்களைப்பற்றி கூறிவிட்டு, மற்றோர் புறம் பொறுமை, நல்லெண்ணம் என்றெல்லாம் சொல்லுவது அர்த்தமற்ற வெறும் பேச்சாகும். அவ்விதம் பழிவாங்க வேண்டுமென்று மறைமுகமாக பூச்சாண்டி காட்டுவது, சிங்களவராகிய எங்கள் மதிப்பையும் எங்கள் சமய நம்பிக்கையின் மதிப்பையும் உயர்த்தமுடியாது. நமது சமய நம்பிக்கைகளை காரியபூர்வமாகக் காட்டாவிடில், வீட்டில் நாம் சமய வழிபாடு செய்வதில் என்ன பயன்! மற்றவர்களின் கருத்துக்களை அனுதாபத்துடன் மதிப்பது தான் அன்பு என்பதன் அர்த்தமாகும்.

400 வருடகாலமாக சிங்களவராகிய நாம் அனுபவித்த "துக்கம், அடிமைத்தனம்" இவற்றிலிருந்து விடுதலையடைந்ததாகக் கூறுகிறார் திரு. மெத்தானந்தா. அதே "துக்கத்திலும் அடிமைத்தனத்திலும்" தமிழரை ஆழ்த்திவிட திரு. மெத்தானந்தா முயலுகின்றாரா?

தமிழருக்கு நியாயம் வழங்கி, அவர்களை சகோதரர்களாக நாம் நடத்துவோமாயின் அவர்கள் சமஷ்டி அரசாங்கம் அமைக்க முயலுவரென்று நாம் சற்றும் கருதவில்லை.

எல். ஜயதுங்க.
பி. ஜி. பெரேரா.

6, வானர்சட் பிளேஸ்
வெள்ளவத்தை
கொழும்பு.

## மானிப்பாய் கிராமச்சங்கம்

'ஈழநாடு' 21-3-61 இதழில் 'வெளியேறவில்லை' என்ற தலைப்பில் வெளியான மானிப்பாய்க் கிராமச் சங்கம் சம்பந்தமான விஷயம் உண்மைக்கு முரணானது. இதிற் கையொப்பமிட்டிருக்கும் வெளியேறிய அங்கத்தினராகிய நாங்கள் அன்று நடந்த கூட்டத்தை உத்தியோக பூர்வமான கூட்டமாய் நடத்துமாறு தலைவரைக் கேட்டோம். அவர் மறுத்ததும் உடனே நாங்கள் வெளியேறினோம். எங்களைப் பின் தொடர்ந்து தலைவரும் வெளியேறினார். அவர்கள் கூறியவாறு ஊர்வல ஒழுங்குகள் பற்றியோ மற்றேதும் பற்றியோ ஆலோசிக்கப்படவில்லை. கூட்டம் நடைபெறவுமில்லை.

க. மழவராயர் (உபதலைவர்)
செ. அமுதலிங்கம்
சி. சுப்பிரமணியம்
நா. மகேசன்
க. தம்பிஐயா
ப. இராசகுலசிங்கம்

மானிப்பாய்

---

## டெலிபிரிண்டர் தொழிற்சாலை ஆண்டு இறுதியில் உற்பத்தி

சென்னை, மார்ச் 20

இந்திய அரசினரால் சென்னைநகு அருகே கிண்டியில் நிறுவப்படவிருக்கும் 'டெலிபிரிண்டர்' தொழிற்சாலையில் இந்த ஆண்டு இறுதியில் உற்பத்தி ஆரம்பமாகக்கூடுமெனத் தெரிகிறது. இச் செய்தியை சென்னைசட்டசபையில் தொழில் அமைச்சர் திரு. வெங்கடராமன் தெரிவித்தார்.

# சத்தியாக்கிரகம் வெற்றியளிக்கும்

## தமிழினம் சிறப்புற தமிழ் பல்கலைக்கழகம் அவசியம்

### தனிநாயக அடிகளார் கருத்து

நாவலப்பிட்டி, மார்ச் 21

நம்நாட்டிலுள்ள கல்வியதிகாரிகளில் தமிழர் மிகவும் குறைவு. இந்த நிலையில், தமிழ் எவ்வாறு முன்னேற முடியும். அரசாங்கத்தின் கவனம் இப்போது கல்வியிலன்று. எந்தப் பாடசாலையை எடுப்போம்; எவரை இடம் மாற்றுவோம் என்பதே. இந்நாட்டில் பத்து லட்சம் மக்கள் கல்வியறிவில்லாமல் இருக்கின்றனர். இவ்வாறு வண. தனிநாயக அடிகளார் மத்திய மாகாண தமிழாசிரியர் சங்கத்தின் ஆண்டுவிழாவில் பேசுகையில் குறிப்பிட்டார். சங்கத் தலைவர் திரு. த. ச. சண்முகதாசன் தலைமை தாங்கினுர். சங்கச் செயலாளர் திரு. நா. முத்தையா வருடாந்த அறிக்கையை சமர்ப்பித்தார். திரு. எம். கந்தப்பு வரவேற்புரை கூறினுர்.

தனிநாயக அடிகளார் தொடர்ந்து பேசியதாவது:- கம்யூனிஸ்ட் நாடான ரஷ்யாவில் கூட பெற்ருேர் விரும்பினுல் பாடசாலைகளை நிறுவலாம். ஆனுல், ஜனநாயக நாடான இலங்கையில் கல்விச் சுதந்திரம் மறுக்கப்பட்டிருக்கிறது. பண்புள்ள மாணவர்களை நாம் உருவாக்க வேண்டும். எதிர்காலம் இவர்களிலேதான் தங்கியிருக்கிறது.

இந்நாட்டில் ஒரு மொழிதான் இருக்கவேண்டும் என்று நிதிமந்திரி திரு. டயஸ் கூறுகிருர். இது தவறு. அப்படியானுல் வேறு மொழி பேசுபவர்கள் எவ்வாறு தங்கள் மொழியுரிமையைப் பெறுவது. சைபிரஸ், சுவிட்சர்லந்து முதலான சிறு நாடுகளிலேயே அங்குள்ள மொழிகளுக்கு சம அந்தஸ்து அளிக்கப்பட்டுள்ளது. இங்கிலையில் இலங்கையில் இரு மொழிகளுக்கும் சம அந்தஸ்த்து வழங்கத் தயங்குவதேன்?

சிறுபான்மையினர் தம்முடைய உரிமைகளை நிலைநாட்டுவதுடன் மற்வர்களின் உரிமைகளையும் போற்றவேண்டும். காந்திஜீ காட்டிய வழியைப் பின்பற்றி செய்துவரும் சத்தியாக்கிரகம் வெற்றியே அளிக்கும். பார்லிமெண்டில் சிறுபான்மையினரின் உரிமையைப் போற்றிய திரு. எஸ். டி. பண்டாரநாயக்காவின் நேர்மையைப் பாராட்டுகிருேம். இரு மொழிகளும் அரசகரும மொழிகளாக வேண்டுமென்பதே எமது கோரிக்கை. அத்துடன் தமிழர் பண்பாடு சிறப்புறுவதற்குத் தமிழ்ப்பல்கலைக்கழகம் தோன்றவேண்டும்.

நாவலப்பிட்டி வட்டார வித்தியாதரிசகர் திரு. பொ. சின்னத்துரை ல. தோ. தொ. யூனியன் பிரமுகர் திரு. நா. பொ. தருமலிங்கம் ஆகியோரும் பேசினர். இவ்விழாவில் தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

பின்வருவோர் புதுவருட நிர்வாகிகளாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர் திரு. த. ச. சண்முகதாசன், உபதலைவர்கள்: திரு. செ. நடராசா, திரு. எம். கந்தப்பு, திரு. இளையதம்பி, காரியதரிசி: திரு. நா. முத்தையா, உபகாரியதசி: திரு. மார்க்கண்டு, பொக்கிஷதார்: திரு. செல்லையா, கணக்குப்பரிசோதகர்: திரு. யேசுதாசன். கமிட்டி அங்கத்தவர்களும் தெரிவுசெய்யப்பட்டனர்.

## சட்டவிரோதக் குடியேற்றம்

### தமிழ்நாட்டில் பலருக்கு அபராதம்

சென்னை, மார்ச் 19

இலங்கைக்கு சட்டவிரோதமாகக் குடியேறுவதைத் தடுக்கும் பொருட்டு கடந்த ஜனவரியில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளில் 15 சோதனைகள் நடைபெற்றன. குடியேற முயன்ற 17 பேர்களையும் அவர்களுக்கு உதவிய 13 தரகர்களும், ஏஜண்டுகளும் கைது செய்யப்பட்டனர். இலங்கை அரசாங்கத்தால் வெளியேற்றப்பட்ட 143 பேர் தனுஷ்கோடிக்கு சென்ருர்கள். அவர்கள் கொடுத்த தகவலின் பேரில் 4 தரகர்கள் பிடிக்கப்பட்டு அவர்கள் மீது வழக்கு தொடரப்பட்டது.

அதே மாதத்தில் 54 தரகர்கள், ஏஜண்டுகள்மீது வழக்கு தொடரப்பட்டு அவர்களுக்கு ரூ. 500 லிருந்து ரூ. 3 வரையிலான அபராதம் விதிக்கப்பட்டது. சட்டவிரோதமாக குடுயேற்றம் செய்த 54 பேர்களுக்கு ரூ. 60 லிருந்து ரூ. 3 வரையிலான அபராதம் விதிக்கப்பட்டது.

குடியேற்றத்தை தடுக்கும் நடவடிக்கைகளை விசேட பொலிஸ் படை, பகுதிப் பொலிஸ் படையினர் குடியேற்ற இலாகாவினர் ஆகியோர் மேற்கொண்டனர்.

## லண்டனில் திலகருக்கு நினைவுச்சின்னம்

லண்டன், மார்ச் 21

இந்திய தேசபக்தர்களில் ஒருவரான லோகமான்ய கங்காதர திலகர் 1919-ம் ஆண்டு லண்டனுக்கு விஜயம் செய்து தங்கியிருந்ததை நினைவுகூறும் பொருட்டு, அவர் ல்ண்டனில் தங்கியிருந்த வீட்டில் ஒரு நினைவுச்சின்னம் அமைக்கப்பட்டிருக்கிறது.

அந்த நினைவுச் சின்னத்தை கானு ஜனுதிபதி நிக்ருமாவும், இந்திய ஸ்தானிகர் திருமதி விஜயலக்ஷ்மி பண்டிட்டும் திறந்து வைத்தனர். இந்த வைபவத்தில் கலந்துகொள்ளவிருந்த இலங்கை பிரதமர் திருமதி பண்டாரநாயக்கா சுகவீனம் காரணமாக கலந்து கொள்ளவில்லை. திலகர் தங்கியிருந்த வீட்டில் பாரத மாணவர்களுக்கான ஒரு ஹாஸ்டலும், பாரத கலாசார நிலையம் ஒன்றும் அமைக்கப்படும் என்று தெரிகிறது.

## துண்டுப்பிரசுரம் விநியோகம்

மட்டக்களப்பு, திங்கள்

அரிசி விநியோகம், தருமப் பணம் ஆகியவை சம்பந்தமான விளக்கங்கள் அடங்கிய துண்டுப்பிரசுங்களை மட்டக்களப்பு அரசாங்க அதிபர் பொதுமக்கள் மத்தியில் விநியோகிப்பதற்கு ஏற்பாடு செய்திருக்கிருர். ஆங்கிலம், தமிழ் ஆகிய மொழிகளில்அச்சிடப்பட்டுள்ள இத்துண்டுப் பிரசுரங்களை பொலிசார் விநியோகம் செய்கின்றனர்.

## ஒருநகரமே அழிந்தது

ஜகார்த்தா, மார்ச் 21

இந்தோனேஷியாவின் பிரதேசமான புலோரஸ்தீவில் ஏற்பட்ட ஒரு பூகம்பத்தில் ஒரு நகரமே அழிந்துபோயிக்கக் கூடும் என்று அஞ்சப்படுகிறது.

# தென்னுபிரிக்காவில் இந்தியர்-பாகிஸ்தானியர் நிலை

## ஐ. நா. அரசியல் கமிட்டி விவாதம்

நியுயோர்க், மார்ச் 21

தென் ஆபிரிக்காவில் வாழும் இந்தியர்களதும், பாகிஸ்தானியர்களதும் நிலைமை குறித்து ஐ. நா. வின் விசேஷ அரசியல் கமிட்டி இன்று விவாதிக்கவிருக்கிறது.

தென் ஆபிரிக்காவில், இந்தியர்களும், பாகிஸ்தானியரும் கேவலமாக நடத்தப்படுவது குறித்து ஐ. நா. வில் புகார் செய்யப்பட்டிருக்கிறது. இந்தப் பிரச்சினை 1946-ம் ஆண்டு முதல் ஐ. நா. வின் பரிசீலனையில் இருந்து வருகிறது.

### ஜொகன்னஸ்பர்க்கில் ஆர்ப்பாட்டம்

நேற்று தென்னுபிரிக்கப் பிரதமர் டாக்டர் வெர்வூட் லண்டனிலிருந்து ஜொகன்னஸ்பர்க் வந்து சேர்ந்தபோது அங்குள்ள எதிர்க்கட்சிகள் ஆர்ப்பாட்டம் நடத்தினர். காமன்வெல்த் அமைப்பிலிருந்து தென்னுபிரிக்கா விலகிக் கொள்ளும் என்ற டாக்டர் வெர்வூட் அறிவித்ததுகுறித்து தென்னுபிரிக்காவில் அரசியல் நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது. வெர்வூட்டின் ஆதரவாளர்கள் அவரை ஒரு இலட்சிய புருஷருக்குரிய கௌரவத்துடன் வரவேற்க ஒழுங்குகள் செய்திருந்தார்கள். ஆனுல் எதிர்க்கட்சிகள் அவரை எதிர்த்து ஆர்ப்பாட்டங்கள் நடத்த ஏற்பாடுகள் செய்துள்ளனர். ஜொகன்னஸ்பர்க்கில் நேற்று இரண்டு இடங்களில் கலகங்கள் ஏற்பட்டன. ஐரோப்பியர் அல்லாத 10 அரசியல் தலைவர்கள் அங்கு கைது செய்யப்பட்டனர். தென்னுபிரிக்காவில் ரத்தக்களரியுடன் புரட்சி நடக்கக்கூடுமென்ற பீதி ஏற்பட்டிருக்கிறது.

# மதுவிலக்கை அமுலாக்குக

பின்வரும் தீர்மானங்களும் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன.

மதுவினுல் இலங்கை வாழ் மக்கள் மிக இழிந்த நிலைக்குச் சென்று கொண்டிருக்கின்ருர்களாகையால் உடனடியாக மதுவிலக்கை அமுலுக்குக் கொண்டுவர வேண்டுமென அரசாங்கத்தை இச்சபை கேட்டுக் கொள்ளுகின்றது.

மாணவர்களிடையே புகைப் பழக்கம் கூடிவருவதால் ஆசிரியர்கள் தமது அந்தஸ்தைக் காப்பாற்றிக் கொள்ளும் நோக்கத்திற்காகவேனும் புகைபிடிக்காமல் இருப்பதோடு போக்குவரக்துச் சாதனங்களிலும் புகைக்காமலிருப்பதற்கான சட்டத்தைக் கொண்டு வருமாறு அரசினரைத் தூண்டவேண்டுமென இச்சபை கேட்டுக் கொள்ளுகின்றது.

இலங்கையின் பொருளாதாரம் மிக உயர்நிலையடைய வேண்டுமாயின் இலங்கை வாழ் மக்களனைவரும் சாதி, சமய மொழி வேறுபாடின்றி 'இது எமது இலங்கை' எனும் எண்ணம் உருப்பெற்றவர்களாக வேண்டும். பெரும்பான்மைச் சமூகத்தார் சிறுபான்மைச் சமூகத்தாருக்குத் தாம் அநுபவிக்கும் உரிமைகள் அத்தனையையும் வழங்கி, அவர்களுடன் சமரச மனுேபாவத்தை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும்.

## பழம் அருந்தி மயக்கம்

கோப்பாய் 21

ஆவரங்காலைச் சேர்ந்த மாணவர் சி. சிவசுப்பிரமணியம் மயக்கமுற்ற நிலையில் யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார். நச்சுத் திராவகம் தெளிக்கப்பெற்ற தக்காளிப் பழம் ஒன்றை இவர் தின்றதே இதற்குக் காரணமெனத் தெரிகிறது. இப்போது அவர் குணமடைந்து வருகின்ருர்.

## இந்தியாவில் ரேடியோ உற்பத்தி

புதுடில்லி, மார்ச் 21

இந்தியா 'டிரான்சிஸ்டர்' வானெலிப் பெட்டிகள் தயாரிக்கத் தொடங்கியிருக்கிறது. ஜப்பான் அரசாங்கத்தின் உதவியுடன் இந்த வேலை நடைபெறுகிறது.

## சிறந்த மனப்பண்பை வளர்க்க

### சாரணர் இயக்கம் உதவும்

கரவெட்டி, திங்கள்

"மனிதன் உயர்ந்த பண்பாட்டையும் சிறந்த மனப்பண்பையும், தியாக சிந்தையையும், கடமை உணர்ச்சியையும் வளர்க்க வேண்டியது அவசியம். அந்த நோக்கத்தைப் பூர்த்திசெய்ய சாரணர் இயக்கம் பெரிதும் உதவும்." இவ்வாறு நேற்று முன் தினம் கரவெட்டி திரு இருதயக்கல்லூரி சாரணர் இயக்க அங்குரார்ப்பணக் கூட்டத்தை ஆரம்பித்துவைத்த திரு. வி. கே. சின்னையா கூறினுர். கல்லூரி உதவி அதிபர் திரு. ஜே. எட்வேட் தலைமை தாங்கினுர்.

# காங்கோ நெருக்கடிக்கு பெல்ஜியம் காரணம்

## ஐ. நா. சமரச கமிஷன் அறிக்கை

நியுயோர்க், மார்ச் 21

காங்கோவில் ஏற்பட்ட அரசியல், தேசிய நெருக்கடிகளுக்கெல்லாம் பெல்ஜியத்தின் மனப்போக்குத்தான் அடிப்படைக்காரணம் என்று காங்கோவுக்கான சமரஸக்கமிஷன் தனது அறிக்கையில் கூறியிருக்கிறது.

காங்கோவின் சட்டபூர்வமான பார்லிமெண்டைக் கூட்டினுல் அன்றி அங்கு எழுந்துள்ள நெருக்கடி தீராது என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

'இலியோவின் தலைமையில் நிறுவப்பட்டிருக்கும் அரசாங்கம் பார்லிமெண்டின் அங்கீகாரத்தைப் பெருதவரை சட்டபூர்வமானதாகக் கருதப்படக் கூடாது. மலகாசியில சமீபத்தில் காங்கோ தலைவர்கள் கூடி நிறைவேற்றிய தீர்மானங்களும் அவசியமானுல் காங்கோவின் சட்டபூர்வமான பார்லிமெண்டின் அங்கீகாரத்தைப் பெற வேண்டும். எல்லாவற்று மாக, காங்கோவின் சட்டபூர்வமான பார்லிமெண்டைக் கூட்டினுல்தான் அங்குள்ள நெருக்கடிகளைத்தீர்க்கமுடியும். இவ்வாறு சமரசக்கமிஷன் தனது அறிக்கையில் தெரிவித்திருக்கிறது.

காங்கோவில் அமைதியை ஏற்படுத்த அவசியமானுல் பலாத்காரம் பிரயோகிக்க வேண்டும் என்ற பந்தோபஸ்து சபை தீர்மானத்தை சமரசக் கமிஷன் வரவேற்றிருக்கிறது.

### மொபுட்டு பயமுறுத்தல்

'பனுை, மட்டாடி துறைமுகங்களில் ஐ. நா. துருப்புகளை துரத்தி, தாம் கைப்பற்றியுள்ள பகுதிகளை கைப்பற்ற ஐ. நா. துருப்புகள் மீண்டும் வருவது முடியாதகாரியம். ஐ. நா. துருப்புகள் இரத்தம் சிந்த விரும்பினுல், அவர்களின் இரத்தத்தைச்சிந்தி அனுப்புவோம்" இவ்வாறு கொங்கோ படைத்தளபதி மேஜர் மொபுட்டு பயமுறுத்தியிருக்கிருர்.

'ஹென்றிலி'
உடை அலங்காரத்தின்
உன்னத அடையாளமாகும்

ஹென்றிலி

★ சேட் ★ ஷோட்
★ காற்சட்டை ★

ஹென்றிலி சேட், ஷோட்ஸ், காற்சட்டை ஆகியவற்றை அணியும் ஆடவரும், இளைஞரும் சௌகரியத்தை அனுபவிப்பதுடன் வசீகரமான தோற்றத்தையும் பெற்று அழகுடன் விளங்குகின்றனர்.

ஹென்றிலி உடைவகையில்
நீங்கள் எதைத் தெரிந்தெடுத்து வாங்கினுலும்,
அது கொடுத்த பணத்திற்கு நிறைந்த பெறுமதியாகும்.

ஹென்றிலி (காமெண்ட்ஸ்) லிமிட்டெட்,
பழைய விமான நிலைய் வீதி,
(Old Air Port Road)
இரத்மலானை

யாழ்ப்பாணப் பகுதிகளுக்கு ஏக விநியோகஸ்தர்கள்:
ஆதம்பாய் ஸ்ரோஸ்
16, பெரியகடை,
யாழ்ப்பாணம்

## வரி விளம்பரம்


### உங்கள் நோய்

குணப்படுத்த உத்தர வாதம். நீரிழிவுக்கு 15 நாள் மருந்து ரூ. 15-50. தொய்வுக்கு 10 நாள் மருந்து ரூ. 10-50. இவை பற்றிய கற்றலோக் (Catalogue) இனும்.

வைத்தியர் பரிபூரணநந்தர்,
கைலாசபிள்ளையார் கோவிலடி,
யாழ்ப்பாணம்,
Advt. 58

National Education
Its Concept and Content
by
**N. Sabaratnam**
(B. A Lond.)
Asst. Master, Karainagar-Hindu College.
Price Rs. 1/75 cts.
Publishers:
S. S. Sanmuganathan & Sons.
Jaffna.
Advt. 66.

க. பொ. த. பரீட்சை
1962 - 1964:
தமிழ் இலக்கியம்:
**காட்சிப் படலம்:**
**நிந்தனைப் படலம்:**
சொற் பிரிப்பு, கொண்டு - கூட்டு, அரும்பதவுரை, பொருள் விளக்கம், இலக்கணக் குறிப்புக்கள் அடங்கிய சிறந்த உரை.
ரூ. 2.50
அர்ச். பிலோமினு அச்சகம், யாழ்ப்பாணம்.
Adt. 68.


## பச்சிலைப்பள்ளி பகுதி மக்கள் ஊர்வலம்

பளை, திங்கள்

பளை பச்சிலைப்பள்ளிப் பகுதியிலுள்ள கிராமச்சங்கங்களான முகமாலை, புலோப்பளை, முள்ளிப்பற்று ஆகியவற்றின் தலைவர்களின் தலைமையில் இம்மாதம் 26-ம் திகதி ஊர்வலம் ஒன்று நடத்த ஏற்பாடாகியிருக்கிறது. இந்த ஊர்வலத்தில் வர்த்தகர்கள் விவசாயிகள், சிறுபான்மைத் தமிழர் ஆகியவர்கள் திரளாகக் கலந்துகொள்வார்கள். ஊர்வலத்துக்குப் பின்னர் கச்சேரிக்கு முன்சத்தியாக்கிரகம் செய்வார்களெனவும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

## சத்தியாக்கிரகிகள் மீது பலாத்காரம்
### இந்துவாலிபர் சங்கம் கவலை

கொழும்பு, திங்கள்

அஹிம்சையைப் பின்பற்றி ஆத்மீகப் போராட்டத்தை நடத்தி வருவோர் மீது பொலிசார் பலாத்காரம் பிரயோகிப்பது கண்டு கொழும்பு இந்து வாலிபர் சங்கம் வருந்துவதுடன் அஹிம்சைப் போராட்டம் வெற்றிபெறுவதற்கு இறைவனைப்பிரார்த்திக்குமாறு அனைவரையும் வேண்டுகின்றதென்ற தீர்மானம், சென்ற திங்கட்கிழமை கூடிய கொழும்பு இந்து வாலிபர் சங்க நிர்வாகக் கூட்டத்திலே நிறைவேற்றப்பெற்றது.

திரு. ச. சுப்பையா தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் 'இந்து இளைஞன்' மேலும் வளர்ச்சியடைவதற்காகச் சங்கம் உழைத்தல் அவசியமெனப் பலர் கூறிய கருத்து ஏற்கப்பட்டது.

[21-3-61 இதழின் தொடர்ச்சி]

அகில இலங்கை ஆசிரிய சங்கம், சிங்களஜாதிக குரு சங்கமய, அகில இலங்கைத் தமிழ் ஆசிரியர்சங்கம் அடங்கிய கூட்டுச்சபை இடமாற்றம்பற்றிச் செய்துள்ளசிபாரிசுகளின் மற்றொரு பகுதி இது.

ஆசிரியர்கள் இடமாற்றத்துக்காக கூட்டம் கூட்டமாகத் தெரிவுச் செய்யப்படும்போது கீழ்க்காணும் புள்ளிவிபரத்தைக் கருத்திற்கொள்வது நன்று:

(அ)மணமாகியிருந்தால்-10 புள்ளி.

(ஆ)16 வயதுக்குட்பட்ட பிள்ளைகள் இருப்பின், ஒவ்வொரு பிள்ளைக்கும் 3 புள்ளி.

(இ)வசதிக்குறைவான பகுதி அல்லது சொந்த ஊருக்கு வெளிச் சேவைசெய்தால்—ஒவ்வொருவருடத்துக்கும் 3 புள்ளி. சுமாரான பகுதியானல்—வருடத்துக்கு 4 புள்ளி. நல்லபகுதிஎனில்—வருடத்துக்கு 2 புள்ளி. மிகவும் நல்ல பகுதியானல்—புள்ளி இல்லை. திருமணமாகாத ஆசிரியைகள்—30 வயது—10 புள்ளி, 32—35 வயது—6 புள்ளி 35 புள்ளிவயதுக்குஅதிகமானல்-2

ஒரு குறிப்பிட்ட அளவுக்கு அதிகமான புள்ளிகளைப் பெறும் ஆசிரியர்கள் அடிககடி இடமாற்றத்துக்கு விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்கள் என்று அறிவிக்கப்படல் வேண்டும். தலைமையாசிரியரின் புள்ளிவிபர அறிக்கையுடன் ஆசிரியர்கள் இடமாற்றத்துக்கான விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கவேண்டும்.

ஆசிரியர்கள் இடமாற்ற விதி முறை-2

# புள்ளிவிபர அடிப்படையில் இடமாற்றத் திட்டம்

அதேவேளை, அந்தவிண்ணப்பபத்திரத்தில் குறிப்பிட்ட ஆசிரியர் பலபகுதிகளிலும் செய்துள்ள சேவைகள் குறித்து தலைமை ஆசிரியரால் விபரம் தெரிவிக்கப்பட்டிருக்க வேண்டும். ஆசிரியை ஒருவர் இடமாற்றம் பெறுவதற்கு தகுதி பெருதிருந்தால் அவரது கணவன் பணியாற்றும் பகுதிக்கு புள்ளிகளைக் கருத்திற் கொள்ளாமல் அவரை இடமாற்றம் செய்யலாம்.

இடமாற்றும் சபை கீழ்காணும் அடிப்படையில், உடல் நிலைபற்றிய வைத்தியரின் அத்தாட்சிப்பத்திரத்துடன் சமர்ப்பிக்கப்படும் இடமாற்ற விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளலாம்.

குறிப்பிட்ட ஆசிரியர் ஒருவர் நோயினுற் கஷ்டப்படும்போது அந்நோய் குணப்படுவதற்கு வேறு குறிப்பிட்ட ஒரு பகுதியில் அவர் இருப்பது அவசியம் என்றும், அவர் கடமையாற்றும் பகுதி நோயை அதிகரிக்கும் என்றும் அரசாங்க டாக்டர் சிபாரிசு செய்யவேண்டும். கயரோகம் போன்ற இருதய நோய்களினுல் கஷ்டப்படும் ஆசிரியர் தமது விருப்பப்படி எந்தப்பகுதிக்காவது சென்று கடமையாற்றுவதற்காக விண்ணப்பிக்கும் போது அதற்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும். ஆசிரியர்களின் வழமையான இடமாற்ற ஒழுங்குகள் பின்வருமாறு அமையவேண்டும்.

இரண்டு வருடத்தில் இடமாற்றம் அளிக்கப்படுமென்ற உத்தரவாதத்துடன், ஆசிரியர் குறைந்த பகுதிகளுக்கு அல்லது வசதிக்குறைவான பாடசாலைக்கு ஆசிரியர் முதலில் நியமிக்கப்படல் வேண்டும். அதன் பின், படிப்படியாக வசதிகூடிய பாடசாலைகளுக்கு மாற்றம் பெறவேண்டும்.

பாடசாலைகளை 4 பிரிவுகளாக வகுக்கும் போது, அதிகப்படியான வசதிகள், தளபாடங்கள், காலநிலை, ஆகியவைபற்றியும் ஆலோசித்தல் வேண்டும். ஆசிரியர் இடமாற்றச் சபை, வசிதிகளுக்கேற்ப பாடசாலைகளைத் தரம்பிரித்து வைத்திருக்கவேண்டும். இது ஒவ்வொரு வருடமும் மாற்றத்துக்குரியதாக இருக்க வேண்டும்.

பின்வரும் பகுதிகளில்சேவை புரியும் ஆசிரியர்களிடமிருந்து இடமாற்றத்துக் கான சபை பிரதிவருடமும் விண்ணப்பங்கள் கோரவேண்டும்.

1. வசதிக்குறைவான பகுதிகள், அல்லது பலரும் விரும்பாத பகுதிகள்.

2. சாதாரண பகுதிகள் அல்லது மிகக் குறைந்த பகுதிகள்.

மாவட்டங்களுக்கிடையில் ஆசிரியர்கள் இடமாற்றம் பெறும் அதேசமயம் மாவட்டங்களுக்குள்ளேயே இடமாற்றம் பெறுவதற்கான வசதிகளும் செய்யப்படல் வேண்டும். வசதிகள் குறைந்த ஒரு பாடசாலையில் ஓர் ஆசிரியர் அவர் விரும்பாவிடின் இரண்டு ஆண்டுகளுக்குமேல் கடமையாற்றுமாறு பணிக்கப்படக் கூடாது. வசதிக்குறைவானபாடசாலைகளுக்குப் புள்ளிவிபர அடிப்படையில் ஆசிரியர்கள் தெரிவு செய்யப்பட வேண்டும். இளம்பெண்கள் நகரப்பகுதிகளிலும், திருமணமாகாத ஆண் ஆசிரியர்கள் வசதி குறைந்த பகுதிகளிலும் நியமனம் பெறலாம். மலைகளில் ஏறிச் சேவைபுரிய வேண்டிய பகுதிகளில் வாதம் போன்ற நோயினுல் கஷ்டப்படுகிறவர்களுக்குச் சலுகை அளித்தல் அவசியமாகும். ஆசிரியர்கள் அரசியல்போன்ற துறைகளில் ஈடுபடுகிருர்கள் என்ற காரணத்தால் அவர்களின் சொந்த ஊரிலிருந்து இடம் மாற்றுவதற்கு வித்தியாதிபதி கருதினுல் குறித்த ஆசிரியரின் நடவடிக்கைபற்றி பூரண விசாரணை நடாத்திய பின்னரே இடமாற்றம் செய்தல் வேண்டும்.

ஒரு குறிப்பிட்ட மாவட்டத்தை சொந்த ஊராகக் கொண்ட ஒரு ஆசிரியர் அப்பகுதியில் கடமையாற்றத் தேர்ந்தெடுக்கப்பட்டால் விசேஷகாரணமில்லாமல் இடம் மாற்றப்படக் கூடாது. அதாவது, பொலன்னறுவை அல்லது குருநாகல் ஆகிய இடங்களிலிருந்து ஓர் ஆசிரியர் அந்தப் பகுதிலேயே நியமனம் பெற்ருல் கொழும்பு போன்ற இடங்களுக்கு மாற்றம் கேட்க தகுதியுடையவராக மாட்டார். ஆனுல் வேறுபகுதியிலிருந்து ஓர் ஆசிரியர் நியமனம் பெற்ருல் தொடர்ந்து அங்கேயே இருக்க அனுமதி அளிக்கப்பட மாட்டாது.

(தொடரும்

## பெருபாரி மாகாணம் வழக்கு தள்ளுபடி

புதுடில்லி, மார்ச் 21

பெருபாரி மாகாணத்தை பாகிஸ்தானுக்கு கொடுப்பதற்காக பார்லிமெண்ட் நிறைவேற்றிய தீர்மானங்கள் செல்லுபடியாகாதென உத்தரவிடுமாறு தாக்கல் செய்யப்பட்ட மனுவை இந்திய சுப்ரீம். கோர்ட் தள்ளுபடி செய்தது

## தமிழாசிரியர் மாற்றத்துக்கு எதிர்ப்பு நியாயம் வழங்காவிடின் வேலை நிறுத்தம்
### ஆசிரியர்சங்கத் தீர்மானம்!

திருக்கோணமலையைச் சேர்ந்த மூன்று தமிழாசிரியர்களைப் போதிய முன்னறிவித்தல் இன்றித் தந்தி மூலம் மாற்றம் செய்துள்ளதைத் திருப்பிப் பெறுமாறு அகில இலங்கைத் தமிழாசிரிய சங்கம் வித்தியா பகுதியைக் கேட்டுக் கொள்வதெனவும் இது நிறைவேருவிடில் ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தம் செய்வதெனவும் அ. இ. த. ஆ. சங்கக் கூட்டத்தில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

மாற்றங்களெதுவும் இப்போது செய்வதில்லையென்று கல்வி மந்திரி வாக்களித்திருந்தும் போதிய முன்னறிவித்தல் இன்றி மாற்றியது நீதியற்ற செயலென அங்கத்தினர் சுட்டிக் காட்டினர். சமீபத்தில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள ஆசிரியர்களின் அரசியல் உரிமைகளைப் பறிக்கக் கூடியவிதமாக விடப்பட்டுள்ள சுற்று நிருபத்தைத் திருப்பிப் பெறுமாறு வற்புறுத்துவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

தமிழ் மொழிக்குச் சட்டபூர்வமாக உத்தியோக அந்தஸ்து வழங்க வேண்டுமென்பதை வற்புறுத்தி ஊர்வலங்களும் பொதுக் கூட்டங்களும் யாழ்ப்பாணம், திருக்கோணமலை, மட்டக்களப்பு ஆகிய இடங்களில் நடத்துவதென்ற தீர்மானமும் நிறைவேற்றப் பெற்றது.

தமிழ்ப் பள்ளிக்கூடங்களுக்குச் சிங்களச் சுற்று நிருபங்களும் கடிதங்களும் அனுப்பப் படுவதை ஆட்சேபித்து நீதி மந்திரியைப் பேட்டி, காணுவதென்றும் முடிவு செய்யப்பெற்றது.

### தொண்டர்களுக்கு உதவி

யாழ்ப்பாணம், செவ். அரியாலை மேற்கிலுள்ள சிறுபான்மைத் தமிழரால் கச்சேரிமுன் சத்தியாக்கிரகம் செய்யும் தொண்டர்களுக்கு சென்ற வெள்ளிக்கிழமை உணவு கொடுக்கப்பட்டது.


தண்ணீர் விநியோகத்திற்கு "அல்கத்தீன்" பைப்



பி. எஸ் எஸ். 1972: 1953

தேய்வை எதிர்க்க வல்லது
செதில்களாகப் பெயராது
நிறுவுவது எளிது
500 அடி வரை நீளமுள்ள துண்டுகள் கிடைக்கின்றன.
பிரிட்டிஷ் திட்ட அளவுப் பிரகாரம் இப்பொழுது இலங்கையில் உற்பத்தி யாக்கப்படுகின்றது.

"அல்கத்தீன்" பைப் கீழ்கண்ட வியாபார ஸ்தாபனங்களில் கிடைக்கிறது:

● வாக்கர் அன்ட் கிரைக் லிமிடெட்டும் கிளை ஸ்தாபனங்களும். ● ப்ரௌன் அன்ட் கோ. லிமிடெட்டும் கிளை ஸ்தாபனங்களும். ● கார்டோஸா ஸ்டோஸ், நுவரலியா. ● கன்னன் அன்ட் கம்பெனி, பண்டாரவளை. ● பண்டாரவளை பாரேஜ் ஸ்டோஸ், பண்டாரவளை. ● எ. லி. எச். முத்தலிப், 119, பிரின்ஸ் ஸ்றீட், புறக்கோட்டை. ● பக்கீர் சாய்பு அன்ட் சன்ஸ், பதுளை. ● நேஷனல் ட்ரேடிங் கோப்பரேஷன், கண்டி. ● எஸ்டேட் சப்ளைஸ், கண்டி. ● சாரவேல் அன்ட் சன்ஸும் கிளை ஸ்தாபனங்களும். ● சென். அன்தோனி ஹாட்வெயா ஸ்டோஸும் கிளை ஸ்தாபனங்களும். ● உப்பாலி ஸ்டோஸ், மாத்தளை. ● டப்லியு. எம். சலி, காலி.

ICI

"அல்கத்தீன்" ஐ.ஸி.ஐ. பொலிதீனுக்கு அளிக்கும் வியாபாரப்பெயர்.

இம்பீரியல் கெமிக்கல் இண்டஸ்ட்ரீஸ் (எக்ஸ்போட்) லிமிடெட்.
(இம்பீரியல் கெமிக்கல் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட்டின் துணைக் கம்பெனி. இங்கிலாந்தில் இணைக்கப்பெற்றது. அங்கத்தவரின் பொறுப்பு வரையறுக்கப்பட்டது.)
தபாற் பெட்டி 352, கொழும்பு.

# சுகாதார ஊழியர்களுக்கு பங்கீட்டரிசி

## ஆஸ்பத்திரிகளுக்குள்ளேயே விநியோகிக்க முடிவு

யாழ்ப்பாணம், புதன்

**யாழ்ப்பாணம் சுகாதார சேவை ஊழியர்களுக்கும் அவர்களின் குடும்பங்களுக்கும் ஆஸ்பத்திரிகளுக்குள்ளேயே பங்கீட்டரிசி வழங்கப்பட இருக்கிறது.**

அகில இலங்கை சுகாதார இலாகா தொழிலாளர் சங்கம் அதன் தலைவர் திரு. எஸ். குணவர்த்தனவின் தலைமையில் சுகாதார அமைச்சு அதிகாரிகளைப் பேட்டி கண்டு யாழ்ப்பாணப் பகுதி சுகாதார சேவையாளருக்குச் சென்ற இரண்டு வாரமாகப் பங்கீட்டு அரிசி வழங்கப்படாததுபற்றி எடுத்துக் கூறியது.

"இந்த நிலை நீடித்தால் சகோதர அங்கத்தவர்களின் குறையை நீக்க அகில இலங்கையிலுள்ள சுகாதார ஊழியர் அனைவரும் வேலை நிறுத்தம் செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும்" என்று தூதுகோஷ்டியினர் சுட்டிக்காட்டி உடனடியாகப் பங்கீட்டரிசி வழங்க நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக் கொண்டனர்.

பங்கீட்டரிசி விநியோகம் நடைபெறுவதாக உயர் அதிகாரிகளால் கூறப்பட்டதெனினும் அது தவறான செய்தியென்று யாழ்ப்பாணத்திலிருந்து வந்த திரு. எஸ். ஆர். அருமைநாயகம் கூறியதுடன் யாழ்ப்பாணத்தில் சத்தியாக்கிரகத்தின் நிலையையும் பங்கீட்டரிசி கிடைப்பதிலுள்ள கஷ்டங்களையும் எடுத்துக் கூறினர்.

இதன்பின் சுகாதார ஊழியர்களுக்கும் அவர்கள் குடும்பங்களுக்கும் ஆஸ்பத்திரிக்குள்ளேயே பங்கீட்டரிசி வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்" என்று அமைச்சு அதிகாரிகள் உறுதியளித்தனர்.

### கடனுக அரிசி வழங்கப்படும்

அரிசி பெறுவதில் சிறு சேவையாளரின் வழமையான முறையைத் தூதுகோஷ்டியினர் விளக்கிக் கூறினர். சேவையாளர்கள் மாத முடிவிலேயே வாடிக்கைக் கடைக்காரருக்குப் பணம் கொடுப்பதாவெம் ஆஸ்பத்திரிகளில் பங்கீட்டரிசி வழங்கப்பட்டால் வைத்திய அதிகாரிகளுக்கு உடனடியாகப் பணம் கொடுக்க முடியாதென்றும் சுட்டிக் காட்டப்பட்டது. இதை ஏற்றுக் கொண்ட அதிகாரிகள் அரிசி கடனுகக் கொடுக்கப்படுமென்றும் அதற்குரிய பணம் சம்பளத்தில் கழிக்கப்படுமென்றும் தெரிவித்தனர்.

## காங்கோ பார்லிமெண்ட் நேருஜி கருத்து

கெய்ரோ, மார்ச் 21

காங்கோவின் சட்டபூர்வமான பார்லிமெண்ட் கூடவும், மந்திரிசபையொன்று அமைக்கவும் ஐ. நா. உத்தரவாதம் அளிக்கவேண்டுமென்று பாரதப் பிரதமர் நேரு இன்று கெய்ரோ விமான நிலையத்தில் நிருபர்களிடம் கூறினர்.

பிரதமர் நேரு பாரதம் புறப்படுவதற்காக கெய்ரோ விமான நிலையத்துக்கு வந்தபொழுது விமானம் பழுதடைந்து விட்டது. எனவே, அதிபர் நாஸருடன் அவர் திரும்பிச்சென்ருர். மலகாசியில் சமீபத்தில் காங்கோ தலைவர்கள் கூடி தீர்மானங்கள் நிறைவேற்றியது குறித்து நிருபர்கள் நேருவிடம் கேட்டபோது மலகாசியில் கூடிய தலைவர்களை காங்கோ மக்களின் தலைவர்களாகக்கொள்ள முடியாதென்றும் பார்லிமெண்ட் உறுப்பினர்தான் மக்கள் தலைவர்களாக இருக்க முடியும் என்றும் நேரு கூறினர்.

## தமிழ்ப்பல்கலைக்கழகத்துக்கு நிதி உதவி

கோப்பாய், மார்ச் 21

ஆவரங்கால் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் அதன் இலாபத்தில் 2000 ரூபாயை தமிழ்ப்பல்கலைக்கழக இயக்கத்துக்கு வழங்குவதென முடிவு செய்துள்ளது. திரு. வே. சு. வயிரமுத்து தலைமையில் நடைபெற்ற இச்சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் இத் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பெற்றது.

## ராணுவத்தை வாபஸ் பெறுக!

யாழ்ப்பாணம், திங்கள்

வடக்கு, கிழக்கு மாகாணங்களிலிருந்து ராணுவத்தை உடனடியாக வாபஸ்பெறும்படி அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்ளும் தீர்மானம் ஒன்று நெடுந்தீவு சமூக முன்னேற்றக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது. வேறு பல தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன. கூட்டத்துக்கு திரு. அ. செபரத்தினம் தலைமை வகித்தார்.

## சுகாதார ஊழியரின் சம்பளப் பிரச்சினை

யாழ்ப்பாணம் சுகாதார சேவை அத்தியட்சகர் காரியாலயத்தின் முன் சென்ற சில தினங்களாகச் சத்தியாக்கிரகம் நடைபெற்று வருவதால் ஊழியர்களுக்கு மார்ச் மாதச் சம்பளம் கொடுபட நடவடிக்கை எடுக்கப்படவில்லையென்றும் புதுவருட முற்பணம் கொடுக்கப்படவில்லையெனவும் எடுத்துக் காட்டப்பட்டது. இன்றுள்ள நிலைமையைச் சமாளிக்க மூன்று மாதச் சம்பளம் முன் பணமாகக் கொடுக்கப்பட வேண்டுமென்றும் கோரப்பட்டது.

இவ்விஷயம் பற்றி மந்திரி சபைதான் முடிவு செய்ய வேண்டுமென்று அதிகாரிகள் பதிலளித்தனர்.

இப்பிரேரணையை அமைச்சர் தீர்த்து வைப்பாரென்றும் இதற்காக வேலை நிறுத்தம் செய்ய வேண்டாமென்றும் அதிகாரிகள் கேட்டுக் கொண்டனர்.

இத்தூதுகோஷ்டியில் பொதுக் காரியதரிசி திரு. பெர்னந்து, திரு. கே. எஸ். சில்வா ஆகியோரும் அங்கம் வகித்தனர்.

## கேளிக்கைகள் இல்லை!

கோப்பாய், மார்ச் 11

பள்ளிக்கூடங்களிலும் பொதுஸ்தாபனங்களிலும் நடைபெறும் களியாட்டுவிழாக்கள், விளையாட்டுப் போட்டிகள் முதலியன தமிழுரிமைப் போராட்டம் முடிவடையும் வரை நடைபெருதெனத் தெரிகிறது.

யாழ்ப்பாண மாவட்ட சனசமூக நிலையங்களின் சமாசத்தினல் ஏற்பாடு செய்யப்பட்டு அண்மையில் நடைபெறவிருந்த சமாசவிழா தமிழ் உரிமைப் போராட்டத்துக்கு ஒரு முடிவு காணும்வரை நடைபெறமாட்டாதென நிலையங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆலயங்களில் நடைபெறும் திருவிழாக்களில் சிலசமயம் இடம்பெறும் கேளிக்கை நிகழ்ச்சிகள் இம்முறை நடைபெறமாட்டாதெனவும் இதற்குப் பதிலாக வழிபாடுகளும் விசேஷ ஆராதனைகளும் நடைபெறுமெனத் தெரியவருகிறது.

## கால் இழந்தவர் மரணமானர்

வவனியா, திங்கள்

தாம் ஏறிவந்த சைக்கிள் ரயிலுடன் மோதியதால் ஏற்பட்ட விபத்தில் இரு கால்களையும் இழந்த கரவெட்டி வாசியான 24 வயதான ஈஸ்வர ஆனந்தன் என்ற வாலிபர் ஆஸ்பத்திரியில் ஆபத்தான நிலையில் அனுமதிக்கப்பட்டார். அவரைக் காப்பாற்ற டாக்டர்கள் மேற்கொண்ட நடவடிக்கைகள் பலனளிக்காமல் போனதால் மரணமானர்.


இன்பகரமான 3-வது வாரம்!

பார்த்துப் பயன் அடைய வேண்டிய பண்பு நிறைந்த படம்!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) விஜயா (மட்டக்களப்பு)

நடிகர்கள்: என். டி. ராமராவ், வி. நாகையா, டி. எஸ். பாலையா, பி. எஸ். வீரப்பா

நடிகைகள்: சௌகார் ஜானகி, பி. கண்ணும்பா, கிரிஜா, மோகன



ராஜ சேவை

பின்னணி: திருச்சி லோகநாதன், ஏ. எல். ராகவன், கண்டசாலா, எஸ். ஸி. கிருஷ்ணன், பி. சுசீலா, பி லீலா, எஸ். ஜானகி.

அநேகரின் வேண்டுகோளுக்கிணங்க இப்பொழுது திரையிடப்படுகிறது!

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)

எம். ஜி. ராமச்சந்திரன், பானுமதி, சரோஜாதேவி நடித்த

நாடோடி மன்னன்

இப்பொழுது திரையிடப்படுகிறது!

மனோகரா (யாழ்ப்பாணம்)

ஜங்கிள் ட்ரம்ஸ் ஆப் ஆபிரிக்கா

மாலை 3-30, 6-30 இரவு 9-30 மணிக்கும்

இங்கிலேயர் மூர் நடித்தது.

# இன்று வவனியாவில் சத்தியாக்கிரகம் ஆரம்பம்

## அமைச்சுகள் அறிக்கை

கொழும்பு, செவ்.

"புதன்கிழமை காலையிலிருந்து வவனியாக் கச்சேரி முன் மறியல் ஆரம்பிக்கப்படுமெனத் தகவல் கிடைத்துள்ளது" என்று பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சும், கலாசார விவகார உள்நாட்டு அமைச்சும் இன்று கூட்டாக வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளன. அந்த அறிக்கை மேலும் கூறுவதாவது:-

மன்னாரில் கச்சேரி முன் மறியல் நடைபெறுகிறது. சேர் கந்தையா வைத்தியநாதனும் மன்னார் எம். பி. யும் இந்த இயக்கத்துக்குப் பொறுப்பாக உள்ளனர். அப்பகுதியில் மூன்று இடங்களிலிருந்து மாணவர் ஊர்வலங்களை அவர்கள் ஒழுங்கு செய்திருந்தனர்.

யாழ்ப்பாணத்தில் வழக்கத்துக்கு மாருக அமைதி நிலவுகிறது. மறியல் செய்பவர்களின் தொகை குறைந்துள்ளது. பங்கீட்டரிசிக்கான அனுமதிச் சீட்டுக்களை வாசஸ்தலத்துக்கு வந்து பெற்றுக்கொள்வதற்கு விரும்பவில்லையென்று அரசாங்க அதிபருக்கு சுமார் 50 கூட்டுறவுச் சங்கக்கடைகளும் உத்தரவுபெற்றவியாபாரிகளும் தந்தி மூலம் அறிவித்துள்ளனர்.

பங்கீட்டரிசி விநியோகம் பற்றி கிராமச் சங்கங்களின் தலைவர்கள் இன்று கூடி ஆராயவிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

திருக்கோணமலையில் மாற்றம் இல்லை.

மட்டக்களப்பில் கச்சேரியிலும் மற்றும் பல கந்தோர்களிலும் மறியல் நடைபெறுகிறது. சில கந்தோர்களின் முன்னால் மூன்று நான்கு பேர்களே மறியல் செய்கின்றனர். சத்தியாக்கிரகிகள் என்று சொல்லப்படுபவர்களின் போக்கு வரத்து வசதியும் உணவு விநியோகமும் அதிக செலவை ஏற்படுத்துவதாக இருப்பதுதான் இதற்குக் காரணம். சத்தியாக்கிரகிகளுக்கான உணவு நகரசபை வாடி வீட்டு மைதானத்தில் சமைக்கப்படுகிறது.

---

## யாழ்ப்பாணத்தில்

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

ஆனல் கச்சேரி வாசல்களில் மட்டும் சத்தியாக்கிரகம் செய்துகொண்டிருந்த பெண் தொண்டர்கள் நேற்று கஸ்தூரியார் வீதியிலுள்ள வித்தியா கந்தோர் வாசல்களிலும் மறியல் செய்தனர்.

ஆண் தொண்டர்களின் தொகையும் சத்தியாக்கிரக இயக்கத்தைப் பார்வையிட வருவோரின் தொகையும் குறைவாகக் காணப்பட்டபோதிலும் சத்தியாக்கிரகம் செய்யும் பெண்களின் தொகையில் குறைவைக் காணக்கூடியதாக இல்லை.

நேற்றைய மறியல் இயக்கம் உடுவில் எம். பி. திரு வி. தர்மலிங்கம் தலைமையில் நடைபெற்றது. கச்சேரி வாசல்களில் தொண்டர்கள் அமைதியாக உட்கார்ந்து பக்திப் பாடல்களையும் தேசிய கீதங்களையும் பாடிக்கொண்டிருந்தனர்.

---

## திருமதி அழகக்கோன்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஊர்வலமாக வந்து சேர்ந்தனர். பெருந்தொகையான மக்கள் சத்தியாக்கிரகத்தைப் பார்வையிடுவதற்காக கச்சேரி முன் திரண்டு நின்றனர்.

சத்தியாக்கிரகிகளுக்கு உணவு வழங்குவதற்கு மன்னாரிலுள்ள வர்த்தகர்கள் பலர் முன்வந்துள்ளனர். உணவு விநியோகத்தை சேர் கந்தையா வைத்தியநாதன் கவனித்து வருகிறார்.

வடபகுதி பொலிஸ் சுப்ரின்டென்ட் திரு. ஆண்ட் இன்று மன்னாருக்கு வந்து சத்தியாக்கிரக இயக்கத்தைப் பார்வையிட்டார்.

---

## அரசாங்க ஊழியர்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தால் அங்கு அவர்கள் கடமை புரியச் சென்றால் அவர்களும் 'சத்தியாக்கிரகிகளாகவே" கணிக்கப்படுவார்களென்றும் தூதுகோஷ்டியினர் கூறினர்.

அரசாங்க ஊழியரின் இடமாற்றத்தைத் தற்சமயம் நிறுத்தி வைக்கவேண்டுமென்றும் அரசாங்க ஊழியருக்குச் சம்பளம் கிடைக்க வழிசெய்ய வேண்டுமென்றும் தூதுகோஷ்டி கேட்டுக்கொண்டது.

இவ்விஷயம் பற்றி மந்திரி சபையில் எடுத்துக்கூறி ஆவன செய்வதாக உணவு அமைச்சர் உறுதியளித்தார்.

அரசாங்கத்தின் தற்காலிகத் தலைவர் திரு. சி. பி. டி' சில்வாவை தூதுகோஷ்டியினர் சந்திக்க முயன்றபோது தனக்கு சம்பந்தப்பட்ட அறிக்கைகள் கிடைக்கவில்லையென்றும் இந்நிலையில் சந்தித்துப் பேசுவதால் பயன் எதுவும் இல்லையென்றும் தெரிவித்துவிட்டாராம்.

இத்தூதுகோஷ்டியில் குமாஸ்தாக்கள் சங்கத் தலைவர் திரு. ரி. பி. திலநாயக்கா, பொதுக்காரியதரிசி ஐ. ஜே. விக்கிரமா, திரு. எஸ். பாலசிங்கம், திரு. என். விஜயசிங்கம், திரு. எஸ். இரத்தின சபாபதி, திரு. ரி. பூபாலன் ஆகியோர் அங்கம் வகித்தனர்.

---

## இரண்டாவது பாண்டுங் மகாநாடு

ஆசிய ஆபிரிக்க நாடுகளின் உறவைப் பலப்படுத்த இரண்டாவது மகாநாடு ஒன்றை பாண்டுங்கில் மீண்டும் கூட வேண்டுமென்று பாரதப் பிரதமர் நேரு ஜனதிபதி நாசருக்கு ஆலோசனை தெரிவித்துள்ளார்.

---

## தாக்கப்பட்டார்

மாவிட்டபுரம்,செல்வாய்

இளவாலையைச் சேர்ந்த சீனிவாசகம் குணலிங்கம் என்பவர் இராணுவ வீரர் சிலரால் தாக்கப்பட்டதாகவும் இப்பொழுது அவர் காங்கேசன்துறை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுச் சிகிச்சை பெற்று வருவதாகவும் அறியப்படுகிறது.

---

## நாடு திரும்பும் பிரதமர்

### வரவேற்பளிக்க ஏற்பாடு

கொழும்பு, செவ்வாய்

லண்டனில் நடைபெற்ற காமன்வெல்த் பிரதம மந்திரிகள் மகாநாட்டில் கலந்துகொண்டபின் வியாழக்கிழமை பிற்பகல் கொழும்பு வந்து சேரும் பிரதம மந்திரி திருமதி சிறிமா பண்டாரநாயக்காவுக்கு உற்சாகமான வரவேற்பளிக்க ஒழுங்குகள் செய்யப்பட்டுவருகின்றன.

வியாழக்கிழமை பிற்பகல் 2-55க்கு இரத்மலானை விமான நிலையத்தில் வந்திறங்கும் பிரதமரை கவர்னர்ஜெனரல் சேர் ஒலிவர் குணத்திலக்கா, அரசாங்கத்தின் தற்காலிக தலைவர் திரு. சி. பி. டி' சில்வா, மராமத்து மந்திரி திரு. பி. பி ஜி. கலுகல்ல, கலாச்சார விவகார உள்நாட்டு மந்திரி திரு. மைத்திரிபால சேனநாயக்கா ஆகியோர் வரவேற்பார்கள்.

இதன்பின் மோட்டார் சைக்கிள் பொலிஸ்படையினர் முன் செல்ல பிரதமர் சிறிமா 'டெம்பிள் ட்றீஸ்'க்கு காரில் செல்வார்.

விமான நிலையத்தில் பெருந்திரளான மக்கள் பிரதமரை வரவேற்கக் கூடுவார்களென்று எதிர்பார்த்து அதற்கான ஒழுங்குகளும் செய்யப்படுகின்றன.

---

## கூப்பன் அரிசி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

முக்கியமான அம்சத்தைப்பற்றி அந்த அறிக்கை எதுவும் குறிப்பிடவில்லை. சாதாரண நேரத்தில் யாழ்ப்பாண விநியோக நிலையத்தில் ஒரு பகுதி நேரம் வேலை செய்யும் உதவி உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரி, பங்கீட்டரிசிக்கான அனுமதிச் சீட்டுக்களை, விநியோக நிலையத்திலுள்ள அவரது காரியாலயத்திலிருந்து சமாஜங்களுக்கு வழங்கவேண்டுமென்பதுதான் சமாஜங்கள் அரசாங்க அதிபருக்குச் சமர்ப்பித்த யோசனையாகும். இந்தயோசனையின்மீது கவனம் செலுத்தப்படவில்லை. கச்சேரி வளவிலுள் அரசாங்க அதிபரின் காரியாலயத்துக்கு வந்து பங்கீட்டரிசிக்கான அனுமதிச்சீட்டுக்களைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று சமாஜங்களுக்கு மீண்டும் மீண்டும் வற்புறுத்துவது, மக்களுக்குப் பங்கீட்டரிசி கிடைக்காமல் போவதற்கு அரசாங்கம் முழுமூச்சுடன் முயற்சி செய்வதுபோல் தோன்றுகிறது.

உண்மைவிபரம் வருமாறு:-

(அ) இம்மாதம் 16ந் திகதி வியாழக்கிழமை யாழ்ப்பாண அரசாங்க அதிபர், சமாஜங்களுக்கு தந்திகள் அனுப்பியிருந்தார்.

கூப்பன்கள் இருப்புப் பதிவுப் புத்தகம், பணம் முதலியவைகளுடன் அனுமதிச் சீட்டுக்காக எனது காரியாலயத்துக்கு வரவும். அரசாங்க அதிபர், யாழ்ப்பாணம்"

(ஆ) இம்மாதம் 17ந் திகதி வெள்ளிக்கிழமை சமாஜங்கள் தந்திமூலம் பதிலளித்தன.

"உங்கள் காரியாலயம் இன்னும் பொதுமக்கள் வருவதற்குரிதாக இல்லை. சமாஜப் பிரதிநிதிகள் உங்கள் காரியாலயத்துக்கு வர முடியாமலுள்ளது. தயவு செய்து 40, 41-வது வாரங்களில் செய்யப்பட்டதுபோல் அனுமதிச் சீட்டு வழங்குவதற்கு மாற்று ஒழுங்குகள் செய்யுங்கள்."

(இ) யாழ்ப்பாண அரசாங்க அதிபர் சில சமாஜங்களுக்கு வெள்ளிக்கிழமை மாலையும் மற்றும் சமாஜங்களுக்கு 18-ந் திகதி சனிக்கிழமையும் பதில் அனுப்பினர்.

"அரசாங்க அதிபருக்கு அனுப்பிய உங்கள் தந்தி கிடைத்தது. வாசஸ்தல வாசல் வழியாக அரசாங்க அதிபரின் காரியாலயத்துக்கு வர முடியும். தாமதமின்றி அனுமதிச் சீட்டுக்களுக்கு வரவும். - பதில் அரசாங்க அதிபர்."

(ஈ) இந்தத் தந்திக்கு சமாஜங்கள் பதிலளிப்பதற்கு முன்னரே அரசாங்க அதிபரின் உத்தரவிற்கிணங்க, நேரடியாக அரிசி விநியோகிப்பதற்காக அனுமதிச் சீட்டுக்களைப் பெற்றுக்கொள்ள கூப்பன்களுடனும் பதிவுப் புத்தகங்களுடனும், அரசாங்க அதிபரின் காரியாலயத்துக்குச் செல்லுமாறு கூட்டுறவுச் சங்கக் கடைகளுக்கும், உத்தரவாதம் பெற்ற வியாபாரிகளுக்கும் காரியாதிகாரிகள் சுற்று நிருபம் மூலம் வேண்டுகோள் விடுத்திருந்தனர். இந்த வேண்டுகோளுக்குப் பயனே கிடைக்கவில்லை.

(உ) வாசஸ்தல வாசல் வழியாக அனுமதிச் சீட்டுப் பெற வரவேண்டுமென்ற அரசாங்க அதிபரின் வேண்டுகோள்பற்றி 18-ந் திகதி சனிக்கிழமை சமாஜங்கள் பரிசோதனை செய்தன. பதிலாக பின்வரும் தந்தியை அனுப்பினர்:-

"தற்போதுள்ள சூழ்நிலையில் கச்சேரி வளவுக்குள் உள்ள எந்தக் காரியாலயத்துக்கும் சமாஜப் பிரதிநிதிகள் வருவதற்கு முடியவில்லை. யாழ்ப்பாண விநியோக நிலையத்தில் அனுமதிச்சீட்டு வழங்கும்படி கேட்டுக்கொள்கிறோம்."

விநியோக நிலையத்தில் அனுமதிச்சீட்டு வழங்கவேண்டுமென்று கூறிய யோசனைபற்றி விளக்கம் தெரிவித்து கடிதம் ஒன்றும் அனுப்பப்பட்டது. உணவு விநியோக ஸ்தாபனத்தின் ஒரு உட்பகுதிதான் யாழ்ப்பாண விநியோக நிலையம் என்பதையும் சாதாரண நேரத்தில் அங்கு உதவி உணவுக்கட்டுப்பாட்டதிகாரி கடமையாற்றுபவரென்பதையும் அக்கடிதத்தில் குறிப்பிட்டுக் காட்டப்பட்டிருந்தது.

---

## ஐ. நா. கியுபா பிரதிநிதி திடீர் மரணம்

### பொதுச்சபைக் கூட்டம் ஒத்திவைக்கப்பட்டது

நியூயோர்க், மார்ச் 21

ஐ.நா.வின் கியுபா பிரதிநிதியான மானுவல் டிஸ்பே நேற்று பொதுச்சபைக் கூட்டத்துக்கு வெளியில் திடீரென மூர்ச்சையாகி விழ்ந்து மரணமானர்.

அவர் மரணத்தையொட்டி ஐ. நா. பொதுச்சபை 3 நிமிஷ நேர மகாநாட்டுக்குப் பின் ஒத்திவைக்கப்பட்டது. மானுவல் டிஸ்பேயின் மரணத்துக்கு அனுதாபம் தெரிவிக்கும் பொருட்டு பொதுச்சபை அங்கத்தவர்கள் ஒரு நிமிடம் எழுந்து நின்று மௌனம் அனுஷ்டித்தனர். ஐ. நா. கொடி அரைக்கம்பத்தில் பறக்கவிடப்பட்டது.

ஐ. நா. பொதுச்சபைக் கட்டிடத்தின் வெளியில் பேசிக்கொண்டிருந்த கியுபா பிரதிநிதி திடீரென்று மார்பைப் பிடித்துக்கொண்டு கீழே விழுந்தார். அவரை உடனடியாகப் பரிசோதித்த டாக்டர்கள் ரணசிகிச்சை மூலம் சிகிச்சை செய்ய முயன்றும் அவரது உயிரைக் காப்பாற்ற முடியவில்லை.





DALMIA CEMENT (BHARAT) LTD.
DALMIAPURAM (TIRUCHIRAPALLI)

ஏக விநியோகஸ்தர்கள்:

செட்டிநாட் கார்ப்பரேஷன் (பிரைவேட்) லிமிட்டெட்

116/118 கெய்சர் வீதி, : : கொழும்பு.


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேலை வீதி, 63-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1961-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 22-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது.